**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 31.07.2026**
**OS. No. 72/2023**
**வழக்கு சாட்சி DW.1– அண்ணாமலை, த/பெ.இருசாகவுண்டர்.**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் வாதியின் காம்பௌண்ட் சுவர் எங்கள் இடத்தையும் வளைத்து கட்டியுள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது புறம்போக்கு நிலம் ஆகும். என் தந்தை அனுபவத்திலிருந்தது, அதை அவர் என் தாயாருக்கு எழுதி வைத்தார். என் தாயாருக்கு பிறகு எனக்கு கிடைத்துள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக எழுதி வைத்த ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பட்டா மற்றும் உரிமை ஆவணங்கள் எதுவும் எங்கள் பெயரில் இல்லை என்றும், அவ்வாறு நாங்கள் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் தாவா சொத்தை பொறுத்து நான் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

2) ஆவணங்கள் எதுவும் இல்லாததால் தாவா சொத்தின் அளவுகள் மற்றும் நீளம் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரியல்ல. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சொத்து விவரமாக நாங்கள் பிராதில் காட்டியுள்ளது மேட்டூர் முனிசிபாலிட்டி, பொன்நகர் வார்டு A, பிளாக் எண்.37, TS எண்.29, கிழக்கு–மேற்கு இரு பக்கமும் 27 அடி, வடக்கு–தெற்கு இரு பக்கமும் 45 அடி என மொத்தம் 1215 சதுரடி மற்றும் அதிலுள்ள க.எண்.29–28/B என்ற வீடும் என்று காட்டியுள்ளோம் என்றால் சரிதான்.

3) அதன் சக்குபந்தியாக வடக்கு பக்கம் முகமது உஷேன் அவர்களின் வீடு, தெற்குபக்கம் முனிசிபாலிட்டி ரோடு, கிழக்கு பக்கம் பாலமுருகன் வீடு, மேற்குபக்கம் ஓடை என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் கடந்த

03.012.2020 ல் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கேவியட் மனுவில் சொத்துவிவரமாக பொன்நகர், வார்டு.29, கிழமேல் இருபுறம் 27 அடி, தென்வடல் இருபுறம் 45 அடி, ஆக 1215 சதுரடி என்றும், அதற்கு சக்குபந்தி நீரோடைக்கு கிழக்கு, முகமது உஷேன் மனை நிலத்திற்கு மேற்கு, நகராட்சி ரோட்டிற்கு வடக்கு, அண்ணாமலை வீட்டிற்கு தெற்கு என்று காண்பித்துள்ளோம் என்றால் சரிதான்.

4) நான் பிராதில் வேறு சக்குபந்தியும், கேவியட் மனுவில் வேறு சக்குபந்தியும் சொல்லியுள்ளேன் என்றும், அதனால் எனக்கு என் சொத்தை பற்றிய விவரங்களே தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்துவிவரங்களில் சொல்லப்பட்டுள்ளதை காண்பிக்கும் வகையில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிலத்தில் தான் வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) முதலில் சொத்தில் நான் வீடு கட்டினேனா, வாதி கட்டினாரா என்றால் வாதிதான் கட்டினார். முதலில் வாதி வீடு கட்டிவிட்டு, பிறகு தான் காம்பௌண்ட் சுவரை ஆக்கிரமித்து கட்டினார். வாதி எனது சொத்தை ஆக்கிரமித்து காம்பௌண்ட் சுவரை எப்போது கட்டினார் என்றால் 20 வருடங்களுக்கு முன்பே கட்டிவிட்டார். என்னுடைய சொத்தையும், வாதி சொத்தையும் நீதிமன்ற ஆணையர் மூலம் அளக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் கூரை வீட்டை இடித்து, அதிலிருந்த மண் சுவற்றின் மேல் ஆலோபிளாக் கற்களை வைத்து வீடு கட்டியுள்ளேன்.

6) என் வீட்டிற்கும், வாதி வீட்டிற்கும் இடையில்தான் காம்பௌண்ட் சுவர் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு கிழக்குபுறத்தில் திவாதி அமைத்துள்ள செட், கழிப்பறை, உள்ளது என்றால் சரிதான். அதன் சுவர் வாதி கட்டிய காம்பௌண்ட் சுவருக்கு 1 அடி வெளியே தான் உள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டின் ஜன்னலை ஒட்டி பிரதிவாதி கட்டிய காம்பௌண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். அந்த காம்பௌண்ட் சுவருக்கு மேல் தான் பிரதிவாதி தற்போது புதியதாக சுவர்

எழுப்பவேண்டும் என்று கேட்டுள்ளார் என்றால் சரிதான். 30 வருடங்களுக்க முன்பே வாதி காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ள நிலையில், தற்போது அதை எழுப்ப நினைப்பதை தடுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதி வீட்டை சுற்றியுள்ள அனைத்து பக்க காம்பௌண்ட் சுவர்களும் உயர்த்தப்பட்டுள்ளது என்றும், என்னுடைய வீட்டு ஜன்னல் பக்கம் உள்ள காம்பௌண்ட் சுவர் மட்டும் தான் உயர்த்தப்படவில்லை என்றால் சரியல்ல, பாதி தான் கட்டியுள்ளார்.

7) எங்கள் வீட்டின் ஜன்னலை வாதி உடைக்க முயற்சித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் காம்பௌண்ட் சுவரை நான் தான் உடைத்தேன் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தால் விளம்புகை பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்க கூடாது என்றால் சரியல்ல. எங்கள் சொத்தின் நீள அளவு தெரியாதபோது நாங்கள் விளம்புகை பரிகாரம் தான் கோரியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. எங்கள் நிலத்தில் வாதி காம்பௌண்ட் சுவர் கட்டிவிட்டதாக சொல்கையில் அதை இடித்து தருவதற்கு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். உரிய பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யாததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.